Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

மலர் 2 ★ மட்டக்களப்பு ★ 1970 - கார்த்திகை ★ விலை 25 ★ இதழ் 11

# இயேசு சபைக் குருமாரின் 75 வருட நற்பணி

**இம் மாதத்தின் இறுதியில் திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசனத்தில் இயேசு சபைக் குருமார் தங்கள் அப்போஸ்தல பணியின் 75வது வருட நிறைவு தினத்தைக் கண்டுகளிக்கப் போகின்றனர். இம் மகிழ்ச்சிக்குரிய மாபெரும் சம்பவத்தை மேற்றிராசனத்திலுள்ள கத்தோலிக்க மக்கள் அனைவரும் நன்றியறிதலுடன் ஞாபகப்படுத்திக்கொள்வது அவர்கள் கடமையாகும்.**

திருகோணமலை – மட்டக்களப்பு மேற்றிராசனம் 1893ம் ஆண்டுவரை யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் ஒரு பாகமாகவே இருந்து வந்தது. இப் பாகத்தில் விசுவாசிகளின் தொகை குறைவாயிருந்தமையாலும், குருமாரின் பற்றுக்குறையினாலும் மட்டக்களப்பு, திருகோணமலை என்னும் இரு பங்குகளில் இரண்டு அல்லது மூன்று குருமார் மாத்திரமே ஞானத் தொண்டாற்றி வந்தனர். இக் குறையைத் தீர்த்து, வேத போதகத் தொண்டைத் துரிதப்படுத்தும் பொருட்டு, பரிசுத்த தந்தை 13ம் சிங்கராய பாப்பாண்டவர் 1893ம் ஆண்டு ஆவணி 25ல் கீழ் மாகாணத்தையும், வட மத்திய மாகாணத்தின் தம்மன்கடவை வட்டாரத்தையும் யாழ்ப்பாண மேற்றிராசனத்திலிருந்து பிரித்து, திருகோணமலை என்ற பெயர் கொண்ட ஒரு புதிய மேற்றிராசனமாக ஏற்படுத்தினர். இப் புதிய மேற்றிராசனத்தை இயேசு சபையின் சம்பேன் மாகாணம் தனது பொறுப்பாக ஏற்றுக்கொண்டதெனினும், இரு வருடங்களுக்கு தனது குருக்கள் எவரையும் திருத்தொண்

[2ம் பக்கம் பார்க்கவும்]

---

அகில இலங்கை

## மறைக்கல்வி மகாநாடு

எங்கே? யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரி மேன்மாடி மண்டபத்தில்.

எப்போது? 1970 டிசம்பர் 15-ம், 16-ம், நாட்களில்.

ஏன்? நமது பிள்ளைகளுக்கு — அவர்களின் மறைக் கல்வி யூட்டும் பொறுப்பைப் பெற்றோராகிய

[5ம் பக்கம் பார்க்கவும்]

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல...... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயேசுசபைக் குருமாரின்........**

*[1ம் பக்கத் தொடர்ச்சி]*

டாற்ற அனுப்ப முடியவில்லை. ஆனால், 1895ம் ஆண்டு கார்த்திகை மாத இறுதியில் வண. கபிரியேல் மொறீல், அல்போன்ஸ் மேரி எவ்ருட், பிரான்சிஸ் சேவியர் கைம்பேர்கர் என்ற மூன்று குருமார் இங்கு வந்து அமலோற்பவ மாதா சபைக் குருக்களிடமிருந்து மேற்றிராசனத்தைக் கையேற்றனர். அவர்கள் மூவருக்கும் தமிழ் மொழி தெரியாதிருந்தமையால் வண. ஜூல்ஸ் லாமி என்ற குரவர் மதுரையிலிருந்து வந்து சிலகாலம் அவர்கட்குத் துணை புரிந்தார். புதிய மேற்றிராசனத்துக்குப் பொறுப்பான ஆயர் ஒருவர் நியமிக்கப்படும் வரை காலி மேற்றிராசனத்தின் ஆயராகிய அதி வந். வான் றீத் ஆண்டகை அவர்கள் பரிபாலகராகப் பணிபுரிந்தனர்.

சொற்ப காலத்திற்குப்பின் கேரளத்திலுள்ள கோட்டயம் என்ற பிரிவின் ஆயராக இருந்து இளைப்பாறிய அதி வந். சார்ள்ஸ் லவீஞ் ஆண்டகை அவர்கள் திருகோணமலை மேற்றிராசனத்தின் முதல் ஆயராக நியமனம் பெற்று, 1898ம் ஆண்டு மார்கழி மாத இறுதியில் இங்கு வந்து மேற்றிராசனத்தைப் பொறுப்பேற்றார். இவர் தமது புதிய மேற்றிராசனத்தை 14 ஆண்டுகளுக்குத் திறமையுடன் ஆண்டு நடத்தியபின் 1913ம் ஆண்டு ஆடி 7ந் திகதி காலமானார்.

ஏறக்குறைய நான்கு ஆண்டுகட்குப்பின் அதி வந். கஸ்ரன் றொபிஷே ஆண்டகை அவர்கள் திருகோணமலை மேற்றிராசனத்தின் 2வது ஆயராக 1917ம் ஆண்டு பங்குனி 22ம் திகதி நியமனம் பெற்றார். இடைப்பட்ட காலத்திலும் இவரே மேற்றிராசனத்தின் பரிபாலகராகக் கடமையாற்றினார் இவர் ஏறக்குறைய 30 ஆண்டுகட்கு மேற்றிராசனத்தை முன்னேற்றப்பாதையில் இட்டுச் சென்றபின் 1946ம் ஆண்டு மாசி 13ந் திகதி இறைவனடி சேர்ந்தார்.

அவருக்குப்பின் அதி வந். இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை அவர்கள் மேற்றிராசனத்தின் 3வது ஆயராக 1947ம் ஆண்டு ஆடி 10ந் திகதி நியமிக்கப்பெற்றார். இடைப்பட்ட காலத்தில் அதி வண. யோன் லினகன் அடிகள் மேற்றிராசனத்தின் பரிபாலகராகத் தொண்டாற்றினார். அதி வந். கிளெனி ஆண்டகை அவர்கள் இற்றைவரை மேற்றிராசனத்தை அன்போடும் கரிசனையோடும் அயராது ஆண்டு நடத்தி வருகின்றார்.

இந்த மூன்று ஆயர்களின் கீழ் 70க்கு மேற்பட்ட இயேசு சபைக் குருக்களும் சகோதரர்களும் பணியாற்றி வந்துள்ளனர். இவர்கள் நற் தொண்டின் பயனாக கத்தோலிக்கரின் தொகை தீவிரமாகப் பெருகியுள்ளது, பங்குகள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. சுதேச குருக்கள் துறவிகள் உருவாக்கப்பட்டுள்ளனர், புதுத் தேவாலயங்களும் சிற்றாலயங்களும் கட்டப்பட்டுள்ளன, அனாதையர், வயோதிபர், கன்னியர் மடங்கள் நிறுவப்பட்டுள்ளன, கத்தோலிக்க மக்களின் கிறிஸ்தவ வாழ்வு ஞான ஒடுக்கங்கள், கருத்தரங்குகள், அறிவுரைகள், திருவிழாக்கள், பத்திச் சபைகள் மூலம் பேணி வளர்க்கப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் காலஞ் சென்ற சில பேர்போன இயேசு சபைக் குருக்களை மக்களின் நினைவுக்குக் கொண்டுவருதல் நன்றென எண்ணுகிறோம்: வண. மொறீல், எவ்ருட், கைம்பேர்கர், ரேயர், பூற்றி, கொப்பனோ, டுப்போன், பூறி, சாள்ஸ் பொணல், வேர்டினன்ட் பொணல், றிச்சாட், மரியான், தியோபிலஸ், அலோசியஸ் மேரி, அருளப்பா, வன்டென்புஷ், சொம்மேர்ஸ், லினகன், ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

1967ம் ஆண்டு ஐப்பசி 23ந் திகதி, மேற்றிராசன ஆயர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பரிசுத்த தந்தை 6வது சின்னப்ப பாப்பரசர் மேற்றிராசனத்தின் பெயரை ''திருகோணமலை மட்டக்களப்பு மேற்றிராசனம்'' என்று மாற்றி பிரகடனப்படுத்தியுள்ளார்.

கடந்த 75 ஆண்டுகளாக இயேசு சபைக் குருமார் திருகோணமலை—மட்டக்களப்பு மேற்றிராசனத்தில் செய்த அளப்பரிய தொண்டுகளை அறிந்து கொள்வதற்கு மேற்றிராசனம் 1895ல் இருந்த நிலையையும், இன்றைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தல் அவசியமாகும்:

1895ல்: கத்தோலிக்கர் தொகை: 7308; பங்குகள்: 2; குருக்கள்: 3; ஆலயங்கள் சிற்றாலயங்கள்: 16; துறவற மடங்கள்: இல்லை; அனாதையர், வயோதிபர் இல்லங்கள்: இல்லை.

1970ல்: கத்தோலிக்கர் தொகை: 35,016; பங்குகள்: 23: மேற்றிராசனக் குருக்கள்: 32; இயேசு சபைக் குருக்கள்: 22; பிற சபைக் குருக்கள்: 4; குருத்துவ மாணவர்: 21; சிறிய குருமடம்: 1; ஆயத்தக் குருமாணவர்: 40; துற

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

(துணை ஆயர்)

### 20. இறைவழிபாட்டில் திருவருட்சாதனங்களும் அருட்கருவிகளும்.

நித்திய குருவாகிய கிறிஸ்துநாதர் தம் புனித பாடுகள், கல்லறையினின்று உயிர்ப்பு, மாட்சிமிக்க விண்ணேற்றம் என்னும் பாஸ்கா மறை நிகழ்ச்சியின் வழியாக மனுக்குலத்தை மீட்டு இறைவனை நிறைவாய் மாட்சிப்படுத்தும் பணியை நிறைவேற்றினார். இம் மாபெரும் பணியைத் தம் அன்புமிக்க மணமகளாம் திருச்சபை வழியாகத் தொடர்ந்து நடத்தி வருகின்றார் திவ்விய பூசைப்பலி, திருவருட்சாதனங்கள் மூலம். (இறைபணி 5,7). திவ்விய பூசைப்பலியைப்போல், மக்களைப் புனிதப்படுத்துவதையும் கிறிஸ்துவின் மறை உடலை உருவாக்கி வளர்ப்பதையும், இறுதியாக இறைவனுக்கு வழிபாடு செலுத்துவதையுமே திருவருட்சாதனங்கள் தங்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இவை குறிகள் என்ற முறையில் அறிவூட்டுகின்றன. சொற்களாலும் பொருள்களாலும் விசுவாசத்தைப்பேணி வளர்க்கின்றன; உறுதிப்படுத்துகின்றன; வெளிப்படுத்துகின்றன. இவை வெறுங் குறிகள் மட்டுமல்ல. உண்மையில் அருளை அளிக்கும் சாதனங்களாகவும் விளங்குகின்றன. திருவருட்சாதனங்களை நிறைவேற்றுவதால் அவை குறிக்கும் அருள்களை விசுவாசிகள் பயனுடன் பெறவும், இறைவனை முறையாக வழிபடவும், பரம அன்பைச் செயல்படுத்தவும் சிறந்த வகையில் ஆயத்தப் படுத்தப்படுகின்றனர் (இறைபணி 59).

இவ்வாறு விசுவாசிகள் **ஞானஸ்நானத்தால்** திருச்சபையுடன் இணைக்கப்பெற்று கிறிஸ்தவ வழிபாட்டை நிகழ்த்த அழியாத முத்திரையால் குறிக்கப்படுகின்றனர். இறைவனின் பிள்ளைகளாக மறுபிறப்படைந்து, திருச்சபை வழியாக இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட விசுவாசத்தை மனிதர் முன் வெளிப்படையாக அறிக்கையிடக் கடமைப்படுகின்றனர். **உறுதிப்பூசுதலால்** திருச்சபையுடன் நெருங்கிய முறையில் பிணைக்கப் படுகின்றனர். பரிசுத்த ஆவியின் தனி வல்லமையால் உறுதிப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு, கிறிஸ்துவின் உண்மைச் சாட்சிகளாக சொல்லாலும் செயலாலும் விசுவாசத்தைப் பரப்பவும், பாதுகாக்கவும் மிகவும் கடமைப்படுகின்றனர் **தேவநற்கருணையால்** விசுவாசிகள் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய முறையில் இறைவழிபாட்டில் பங்குகொள்கின்றனர். திருவிருந்தில் கிறிஸ்துவின் உடலால் ஊட்டம்பெற்று, இம் மாண்புமிகு திருவருட் சாதனம் சுட்டிக்காட்டி வியத்தகு முறையில் விளைவிக்கும் இறைமக்களின் ஒற்றுமையை வாழ்விலே வெளிப்படையாக காட்டுகின்றனர். **பச்சாத்தாபத்தைப்** பெறுபவர்கள் இறைவனுக்கெதிராகத் தாம் செய்த பாவங்களுக்கு, அவரது இரக்கத்தால் மன்னிப்புப் பெறுகின்றனர்; அத்தோடு அவர்களின் பாவங்களால் புண்படுத்தப்பட்டதும், தனது அன்பாலும் மாதிரியாலும் மன்றாட்டாலும் அவர்களின் மனந்திரும்புதலுக்காக உழைப்பதுமான திருச்சபையோடு மறுவுறவு பெறுகின்றனர். பிணியாளரின் துன்பத்தைத் தணிக்கவும், அவர்களை மீட்கவும், **நோயில் பூசுதலாலும்** குருக்களின் மன்றாட்டாலும் திருச்சபை, பாடுபட்டு மாட்சிபெற்றவரான ஆண்டவரின் அடைக்கலத்தில் அவர்களை வைக்கிறது. **குருத்துவத்தைப்** பெறுபவர்கள் இறைவனின் வார்த்தையாலும் அருளாலும் திருச்சபையில் மேய்ப்பர்களாய் நின்று பணிபுரிய கிறிஸ்துவின் பெயரால் நியமிக்கப்படுகின்றனர். இறுதியாக, கிறிஸ்தவ மணமக்கள் **திருமணம்** என்னும் திருவருட்சாதனத்தால் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையிலுள்ள ஒற்றுமை, வளமிக்க அன்பு ஆகிய மறைபொருள்களின் குறியாக நின்று, அதில் பங்குகொள்கின்றனர். இத் திருவருட்சாதனத்தின் வல்லமையால் தங்கள் திருமண வாழ்விலும், பிள்ளைகளைப் பெற்றெடுத்து வளர்ப்பதிலும் புனிதமடைய ஒருவருக்கொருவர் உதவுகின்றனர் (திருச்சபை 11).

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறிஸ்தவ வாழ்வு

## 1. கடவுளைக் கண்டேன் கருணைவடிவத்தில்

(தேவப்பிரியன்)

அன்று சாவதானமாக இருந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தேன். எங்கேயோ விளையாடிக்கொண்டிருந்த மலர்விழி வந்து என் மடியில் அமர்ந்தாள். அவள் முகத்தில் சோகத்தின் ரேகை படர்ந்திருப்பதைக் கண்டேன். கண்டும் காணுதவன் போல் இருந்துவிட்டேன் ஏனெனில் நான் கேட்டுத் தெரிந்து கொள்வதைவிட அவளாகவே வாய்திறந்து சொல்வது மேல் என்று நான் எப்பொழுதும் கருதுவது உண்டு.

சற்று நேர மௌனத்துக்குப்பின் அவளின் கேள்விக்கணைகள் தொடர்ந்தன.

''கடவுள் இல்லை என்று சொல்கிறுர்களே அப்பா, அது மெய்தானு?''

நான் 'ஆம்' என்ற பொருள்பட தலையை அசைத்தேன். அவளுடைய முகத்தில் இருந்த கவலைக்குறி அதிகமாவதைக் கண்டேன். ஏனெனில் எதிர் பார்த்திருந்த ஒன்றுக்கு எதிர் மாருன பதில் வந்தமையால், அவள் கவலை குறைவதற்குப் பதிலாக அதிகரிப்பது இயற்கைதானே. என் குழந்தையை என்றுமே துன்பத்திற்குள்ளாக்க நான் விரும்புவதில்லை. இருந்தும், 'துன்பமில்லாமல் உணர்ந்த உண்மைகள் அதிக நாட்கள் நிலைத்திருப்பது இல்லை' என்ற உண்மையை நான் என்றும் மறந்தவனும் இல்லை. சற்று நேர மௌனத்திற்குப் பின் அவளுக்கு நான் விளக்கம் கொடுக்க முயன்றேன்.

'மலர்விழி, நீ தேனைக் கண்டிருக்கிறுய் அல்லவா? அன்று உனக்குச் சுகமில்லாமல் இருந்த பொழுது அம்மா அதை உனக்கு மருந்தாகக் கொடுத்தாள்'.

'ஆம் அப்பா' அதற்கும் கடவுளுக்கும் என்ன தொடர்புண்டு?'

'நிறைய இருக்கிறதம்மா. கடவுளுக்கும் இவ்வுலகில் உள்ள பொருள்கள் அத்தனைக்கும் நிறையத் தொடர்புண்டு'.

'என்னப்பா இது! சற்று முன் கடவுள் இல்லை என்று தலையாட்டினீர்கள். இப்பொழுதோ, கடவுளுக்கும் இவ்வுலகில் இருக்கும் பொருட்களுக்கும் தொடர்புண்டு என்கிறீர்கள். எது உண்மை?'

''குழந்தாய், இதே கேள்வியைத்தான் அன்று பிலாத்து இயேசுநாதரிடம் கேட்டான் 'உண்மை என்ருல் என்ன?' நீ கேட்ட கேள்விக்கு, கடவுள் இல்லை என்றேன், பின், அவர் இருக்கிறுர் என்றேன். இவை இரண்டும் முரன்பாடான பதில்களாய் தோன்றினுலும் இரண்டிற்கும் நிறைய ஒற்றுமை உண்டு.

முதலாவது, கடவுள் இல்லை என்றேன். இதற்கு விளக்கம் கொடுப்பதென்ருல் இலகு. பலர் கோவிலுக்குப் போவதை நீ பார்த்திருப்பாய். அங்கு அவர்கள் மன்ருடுவதையும், சுருபங்களைத் தொட்டுக் கொஞ்சுவதையும் பார்த்திருப்பாய். அநேகம் முறை நீயே அப்படிச் செய்திருப்பாய். நல்லது. மீண்டும் இவர்கள் வீடு வந்ததும், ஏன், கோவிலுக்கு வெளியில் வந்ததும், கடவுளுக்கும் தங்களுக்கும் எதுவிதமான தொடர்பும் இல்லாதவர்கள்போல் வாழ்வதையும் கண்டிருப்பாய். இப்படிப் பட்டவர்களின் கடவுள் சிலையெனச் சமைந்து சிந்தனை இன்றிக் கோவிலுக்குள் மாத்திரம் இருக்கின்ருர். இவர்களின் உள்ளக் கோவிலில் அவர் இருப்பது இல்லை. அவர்களின் வாழ்க்கையில் அவரைக் காண்பதும் அரிது. இப்படியான கடவுள் இருப்பதும் ஒன்றுதான். இந்தக் கடவுளைத்தான் யூரி ககாரின் வின்வெளியில் தேடினுன். அவன் கண்டடையவில்லை. கம்யுனிஸ்டுகள் பகைக்கும் கடவுளும் இப்படிச் சிலையாக இருந்து சிதைவுறும் சமுதாயத்தை சிறப்பிக்காக் கடவுளைத்தான். இந்தக்கடவுள் எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், எவர்க்குமே வேண்டாம்.

கடவுள் இருக்கின்ருர் என்றேன். அவர் தான், ஆவியாய், அரூபியாய், நிமலனுய், என்றுமே நீங்காதவராய், எங்குமே நீடித்திருப்பவர். இந்தக் கடவுள் உன் உள்ளத்துள், அவ்வுள்ளத்தைக் கடந்து, உன்னையே

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கிறிஸ்தவ வாழ்வு........**

[4ம் பக்கத் தொடர்ச்சி]

ஆட்கொண்டிருப்பவர். 'கடவுள்' என்ற வார்த்தையைப் பிரித்துப்பார் இந்த உண்மையை அறிவாய். (கட+உள்) உள் கடந்தவர். இதனல்தான் கடவுளையும் அன்பை ஒன்ருக இணைக்கின்ரும். அன்பு எப்படி எல்லாவற்றையும் கடந்து நிற்கின்றதோ அதுபோலக் கடவுளும் எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ருர். ஆகையால்தான் 'அன்பு என்பதும் தெய்வம் என்பதும் ஒன்று என்பது உண்மை அல்லவோ' என்று நாம் கீதம் இசைக்கின்ரும். வேதாகமத்தின் வார்த்தைகள் எங்களுக்கு இதைத்தான் நினைவுறுத்துகின்றன. "கடவுள்" ஆவியானவர். அவரைத் தொழுபவர்கள் ஆவியிலும் உண்மையிலும் அவரைத் தொழுதல் வேண்டும்" (அரு. 4. 24.)

தேனுக்கும் கடவுளுக்கும் என்ன தொடர்பு என்று கேட்டாய். தேனைப் பார்க்கலாம் ஆனல் அதன் உருசையைப் பார்க்க முடியாது. அதை உணரமுடியும். ஒரு துளித் தேனை நாவில் வைத்தால் அது இனிக்கிறது. அதேபோல் கடவுளையும் நாம் அனுபவித்து உணரவேண்டும். கடவுள் இருக்கிருர் என்பதற்கு நான் எத்தனையோ விளக்கங்களைத் தரலாம். ஆனல் நீ அவரை உன் வாழ்க்கையில் உணராவிட்டால் ஒருவிதபலனும் இல்லை. ஏன், யூரி ககாரினையே எடுத்துக்கொள்; அவன் வானமண்டலம் போய் வந்து அங்கு கடவுளைக் காணவில்லை என்ருன். உண்மை. அவனுடைய மூளையை சத்திர சிகிச்சை செய்து பார்த்தால் அங்கு அறிவைக் காண முடியாது; அதன் அறிகுறியைத்தான் காண முடியும். அதேபோல்தான் கடவுளும். அவரைக் காணமுடியாது ஆனல், அவர் இருபதற்காகிய அறிகுறியைக் காணமுடியும்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த மலர்விழி 'அப்படியென்ருல் கோவிலுக்குப் போவதெல்லாம் வீண்வேலை என்கிறீர்களா அப்பா?'' என்ருள்.

''அப்பாவும், மகளும் ஆராய்ச்சிபண்ணியது போதும் சோறு ஆறிவிடப் போகிறது வாருங்கள்'' என்று அழைத்தாள் மனைவி.

''அதைப்பற்றி பிறகு கூறுவேன் மலர்விழி'' என்று இருவரும் எழுந்து உணவருந்தச் சென்ரும்.

❋

**அகில இலங்கை...........**

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நாமே ஏற்றுக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. இத்தலையாய கடனை நாம் எப்படி நிறைவேற்றலாம் என்பதனை ஆராய்வதற்காக.

எப்படி ?

- அகில இலங்கையிலுமுள்ள தமிழ்க் கத்தோலிக்க விசாரணைப் பங்குகளிலிருந்து **தாய்மார்களும், தகப்பன்மார்களும்,** பங்குக் குருவானவர் தலைமையில் வந்து கூடுவார்கள்.
- மறை ஆயர்களும், மறைக் கல்வி விற்பன்னர்களும் அனுபவமுள்ள பெற்ருேர் பிரதிநிதிகளும், உரையாற்றுவார்கள்.
- மகா நாட்டு அவையினர் குழுக்களாகப் பிரிந்து குறித்த பொருள் சம்பந்தமான பிரச்சினைகளை ஆராய்வார்கள்.
- குழுக்களின் ஆய்வுகளை மகாசபை கூடிப் பரிசீலனை பண்ணி அறிஞர்களின் துணையுடன் முடிவுகளைச் செய்யும்.
- விசாரணைப் பங்குகளின் பிரதிநிதிகளுக்கு உறையுளும், உணவும் வழங்கப்படும்.
- நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழில் நடைபெறும்.

**உரைகள்:**

1. **''பிள்ளைகளுக்கு மறைக்கல்வி ஊட்டுவதில் பெற்ருேரின் பொறுப்பு''**
   பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை
2. **''பள்ளிக்குச் செல்லுமுன் பிள்ளைகளுக்கு மறைப்பயிற்சி அளித்தல்''**
   திருமதி. அன்ரோனியா சாமிநாதர் J-P., M.M.C.
3. **''திருவருட் சாதனங்களைப் பெறுதற்கு பிள்ளைகளை ஆயத்தப்படுத்துதல்''**
   சங். சகோதரி ரேஸ் F. M. M.
4. **''இளைஞரின் பிரச்சினைகள்''**
   திரு. L. M. யோசவ், B. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்றோர் மன்றம்

## இல்லற ஒருமைப்பாடு

இருவரோ, பலரோ சேர்த்து ஒரு கருமத்தில் ஈடுபடும்போது, அவர்களது கருமத்தின் வெற்றிக்கு அவர்களின் ஒருமைப்பாடு - ஒற்றுமை இன்றியமையாதது என்பது உலகமே ஒத்துக்கொண்ட உண்மை. வீரர் இருவர் ஒரு படகில் சுற்றுலாவுக்குப் புறப்படுகின்றனர். பாதை, வலித்தல், மற்றும் அவரவர் அலுவல்களில் ஒருமைப்பாடு இல்லையென்றால், இவர்கள் சேமமாய் வீடு திரும்புவதே சந்தேகம்.

இல்லறம் என்னும் ஆழ்கடலில், ஒருமித்தே பயணம்செய்து அக்கரை அடைவோம் எனப் புனித உடன்படிக்கை செய்துகொண்ட புதிய இளம் தம்பதிகளின் நிலையும் இதுவேதான். இப்பயணத்தின் இலக்கு என்ன? தாம் செய்துகொண்ட உடன்படிக்கையின் இயல்பு என்ன? நோக்கம் என்ன? இவ்வுடன்படிக்கை காரணமாக தம்பதிகட்கு ஏற்பட்ட கடமைகள் எவை? மகப்பேறுபற்றி அவர்கள் அபிப்பிராயம் என்ன? அவ்வாறு மகவு பெற்றால், அவர்மட்டில் தம்பதிகட்குண்டாகும் கடமைப்பாடுகள் எவை?

தமது தாம்பத்திய வாழ்வை சித்திகரமாக நிறைவேற்ற விழையும் தம்பதிகள் மேற்காணும் வினாக்கட்குச் சரியான விடைகள் அறிந்திருத்தல் மிக அவசியம்.

தாம்பத்திய வாழ்வைச் சித்திகரமாக நிறைவேற்ற என்றேன். சித்திகரமாக நிறைவேற்றலாவது என்ன? மேற்காட்டிய காரியங்களில் சரியான ஒருமைப்பாடு இல்லாமலும் வாழ்வில் மகிழ்வுற முடியும். உலக விஷயங்களில் (பணம், பொருள் பண்டம், காணிபூமி, வீடு வாசல்) ஓர் அளவு ஒருமைப்பாடுடனும், அது இல்லாமலும், மகிழ்ந்து வாழ்தல் சாத்தியம். ஆனால் இது வாழ்வின் முடிவான பெறுபேறு அல்ல. அது அறம், பொருள், இன்பம், வீடு அடைதல், மோட்சம், நித்திய பேரின்ப வாழ்வு அடைதலே முடிவான பேறு.

(பொ. இராமலிங்கம்)

இந்த அரும்பெரும் பேற்றை அடைய எவ்வாறு வாழலாம்?

இதற்குப் பல வழிகளை அறிந்து, அநுசரித்து, வாழவேண்டும்.

**குடும்பம் ஒரு ஐக்கிய முன்னணி:**

ஒரு கணவனும் மனைவியும் தமக்குள்ள கடமைகளை நிறைவேற்றுதற்கு இறைவனால் சில அதிகாரங்கள் அவர்கட்கு வழங்கப்படுகின்றன. குடும்பத்துக்குத் தலைவன் கணவனே என்பது இறைவனின் நியதி. ஆயினும் தலைவனுக்குள்ள அதிகாரத்தில் பங்கு தலைவிக்குமுண்டு. இதனை இருவரும் மதிக்கவேண்டும். ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து, விளங்கி, வேண்டும்போது விட்டுக்கொடுத்து வாழும் வாழ்வே குடும்ப ஐக்கிய முன்னணி. பிள்ளைகளை இறைவன் ஆணைப்படி, அவர் விருப்பப்படி வளர்ப்பதில் இம்முன்னணிக்கு அதிக வேலையுண்டு. பிள்ளைகள் பெற்றோர் சொற்படி நடக்கவேண்டியவர்கள். ஒரு பிள்ளை சினிமா பார்க்கப்போக தந்தையிடம் அநுமதி வேண்டுகிறான். ஏதோ ஒரு நல்ல காரணத்தையிட்டு தந்தை மறுக்கிறார். தாயிடம் போகிறான். "பாவம். இன்றுமட்டும் போய்வரட்டுமே" என்று அனுப்பிவிடுகிறாள். இச்செய்கையால் பிள்ளைக்குத் தந்தையிடம் இருந்த மதிப்புக் குறைகிறது. இப்படியே தந்தையும் செய்தால் தாயின் அதிகாரத்துக்கு மதிப்புக் கெடுகிறது. இந்நிலை குடும்பத்துள் இருக்கக்கூடாது. ஒன்றுபட்ட நிலையில் அதிகாரம் நிகழவேண்டும். இதனால் பெற்றோர் மட்டில் பிள்ளைகட்குள்ள மதிப்பு அதிகரிக்கும். ஐக்கிய முன்னணி மேலும் வலுவடையும்.

**பிரதம ஒழுக்க நிர்வாகி:**

ஆரம்பத்திலிருந்தே குடும்ப நிர்வாகம், கல்வி, சமய அநுட்டானம் முதலிய பொது

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெற்ருேர் மன்றம்...........

[6ம் பக்கத் தொடர்ச்சி]

விஷயங்களில் இருவர்க்குமிடையே நெருங்கிய ஒன்றுபட்ட மனப்பாங்கு இருக்கவேண்டும்.

புதிய பிரச்சினைகள் தோன்றும்போது - பிரதானமாக பிள்ளைகள் சம்பந்தமானவை யாயின், அவர்கட்குக் கேளாத வகையில் இருவரும் கலந்தாலோசித்து ஒரு முடிபுக்கு வந்த பின்பே பிள்ளைகட்குக் கூறவேண்டும். வழக்கமாக பெரும்பாலான ஒழுக்க சம்பந்த மான ஒழுங்குமுறைகள் தாயிடம் விடப்படு தலே சிறப்பு. பிள்ளைகள் தாயுடனேயே அதிக நேரம் கழிக்கிருர்கள். அதனுல் அவர் களையிட்டு அதிகம் அறிந்திருக்கக்கூடும். அத ஞல் பிள்ளைகளின் பிழையான வேண்டுதல் கட்கு இலகுவில் சம்மதிக்கமாட்டாள்.

வெளியிலிருந்து வீடுவரும் தந்தைகூட, தம்மிடம் கோரப்படும் எவ்வித அநுமதிக்கும், தாயிடம் கலந்தாலோசித்த பின்பே முடிபு செய்தல் சாலச்சிறப்பு. இதனுல் இருவரும் ஒரு பெரும் முகப்பைத் தாங்கும் இரு தூண் கள்போல் குடும்ப பாரத்தைத் தாங்க இய லும். தம் பெற்ருேரிடையே என்றும் ஒரு மைப்பாட்டையே காணும் பிள்ளைகளும் தம் பெற்ருர்மேல் மிகுந்த மதிப்பு, மரியாதை, கீழ்ப்படிவு உடையோராவர். அதே நிலைமை பிள்ளைகள் தம்மிடமே உருவாகி ஒரு சிறந்த கிறீஸ்தவ குடும்பம் உருவாகும்.

குடும்பத் தலைமை:

தம்பதிகள் தமக்குள் ஒருமைப்பாடு காண முடியாத பட்சத்தில், அதன் பொறுப்பைக் கணவனிடம் ஒப்படைத்து விடுதலே மனைவி யின் கடமை. அதிலும் ஒழுக்கம், சமய அநுட்டானம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கற்பனைகளுக்கு மாருக இல்லாத வகையில் தான் ''மனைவி, தன் தலைவனுகிய கணவ னுக்குப் பணிந்து நடப்பாளாக; ஏனெனில் கிறீஸ்து திருச்சபைக்குத் தலைவனுயிருப்பது போல், கணவனே மனைவியின் தலை'' என புனித சின்னப்பர் கூறுகிருர். எப்படியாயி னும், ஒரு பொது விதி பாதிக்கப்படாத வகை யில், கணவன், தன் மனைவியின் விருப்பங் கட்கு இசைந்துபோதலே பெரும்பாலும் நலம்தரும். அதிலும் மேலாக, உடனடியான தீர்வு தேவைப்படாதபோது ஒரு தெய்வ பய முள்ள, அநுபவ முதிர்ச்சிபெற்றவரிடம் அல் லது பங்குத் தந்தையிடம் ஆலோசனை பெறு வது மிக நலமாகும்.

ஒற்றுமையின்மைக்கு ஓர் மூலகாரணம்:

இருசமய விவாகம் பெரும்பாலும் குடும் பத்துள் வேறுபாட்டுக்கு வித்திடுகிறது. இது ஏன்? ஒரு கத்தோலிக்க குடும்பம் திருச்சபை யின் படிப்பினைகளைப் பின்பற்றக் கடமைப் பட்டுள்ளது. வாழ்வின் ஒவ்வொரு நிலையி லும் சரியான, உண்மையான வழியைக் காட்டுவது திருச்சபையே என நம்பி ஏற்றுக் கொள்கிறது. இரு சமய விவாகம் ஆரம்பத் திலேயே இருவருக்குமே வேறுபட்ட மன நிலையுடனேயே வாழ்வு ஆரம்பிக்கிறது. இவ் வேறுபாட்டை எவ்வகையிலும் - எவ்வளவோ அன்பு, எவ்வளவோ தீர்க்கபுத்தி, ஆதரவு, பெருந்தன்மையுடன் மறு சமய தலைவன்/ தலைவி இருந்தாலும் - உண்மையான கத்தோ லிக்க பண்பாடுள்ள ஒரு தலைவன்/தலைவிக்கு எப்போதும் அடித்தளத்தில் ஒரு குறைபாடு இருந்துகொண்டேயிருக்கும். ஆரம்பத்தில் இது தலைகாட்டாது - காலஞ் செல்லச்செல்ல பிள்ளைகளும் வளர வளர சிறிது சிறிதாகத் தலைதூக்கும். பிள்ளைகளின் சமய நிலையில் உச்ச நிலையையடையும். குடும்ப சமாதானம் காற்றில்போக, இறுதியில் பிள்ளைகளும் இரு பக்கமும் திண்டாட விவாகரத்து அளவில் கொண்டு சேர்த்துவிடும்.

பூரண ஒருமைப்பாடு:

ஒரே சமய, கத்தோலிக்க தம்பதிகட் கிடையே எவ்வளவு ஒற்றுமை, மகிழ்ச்சி, சமாதானம்! ஒருமித்து ஆலயம் சென்று, ஒருமித்து பாவப்பரிகாரம் செய்து, பலி ஒப் புக்கொடுத்து திருவிருந்து அருந்தி மகிழ்கி ருர்கள். பிள்ளைகள் பெறுவதில், அவர்களை வளர்ப்பதில், அவர்கட்கு உலக, சமய அறிவு புகட்டுவதில், இல்லச் செபத்தில், வாழ்வு முறையில், திருமணம், தேவ அழைத்தலில் இன்னும் எத்தனையோ கருமங்களில் அவரிரு வர்க்கிடையே அசைக்கமுடியாத ஒற்றுமை. ஏனெனில் இவர்கட்கான எல்லா உதவியும், வழிவகைகளும், நம் அருமைத் தாய் திருச் சபையால் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு விட்டன.

இவர்கள்தான் சேமமாக, வீடு அடை தல் நிச்சயம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேஷம்.

### 3. (ஈ) இறை அரசின் குணங்கள்

மலைப் பிரசங்கத்தை மாணவர் பலர் மனப்பாடமாகக் கூறுவார்கள். இற்றைவரை உலகம் என்றுமே கேட்டிராத, இந்த உன்னத மலைப் பொழிவை, மத்தேயு சுவிசேசம் அதிகாரம் 5லும், லூக்காஸ் சுவிசேசம் அதிகாரம் 6லும், வாசிக்கலாம். இயேசு, திரளான சனக் கூட்டத்தைக் கண்டு, திடல்மீது ஏறி அமர்ந்து, போதித்தபடியினால், இப் பொழிவு மலைப் பொழிவு என்ற பெயரை அடைந்ததுபோலும்! அப்போஸ்தலர்களைத் தெரிந்து எடுத்தபின்பு, இயேசு, தம் சீசர்கள் மத்தியில், இப் பிரசங்கத்தைச் செய்ததாக லூக்காஸ் கூறுகின்றார். எப்படியிருப்பினும், இந்த இரண்டு சுவிசேசகர்களும், தத்தம் சுவிசேசங்களில் குறிப்பிட்டிருப்பவற்றை ஒப்பிட்டுப் படிப்பதினால், இறை அரசின் அறிவுரைகளை நாம் ஆழமாக அறியலாம். ஆரம்பத்தில் இப்பொழிவு, அப்போஸ்தலர்களுக்கும், சீசர்களுக்கும் கொடுக்கப்பட்ட போதிலும், நாளாவட்டத்தில், ஏனையோருக்கும் பொதுவானதாகக் கருதப்பட்டது.

பிரசங்கம், பொழிவு, என்றவுடன் நவீன காலத்தில் நடாத்தப்படும், பிரசங்கங்களும், சொற்பொழிவுகளுமே நம் கண்முன் வருகின்றன. சுவிசேசகர்கள் கூறுமிந்தப் பொழிவு, அப்படியானதொன்று அல்ல. இயேசு போதித்த அனைத்தும், வார்த்தைக்கு வார்த்

## அருள்திரு. R. S. லோப்பு அடிகள்.

தையாக, சுவிசேசகர்களால் எழுதப்படவில்லை. இயேசு, பல சந்தர்ப்பங்களில், பற்பல இடங்களில் போதித்தவற்றைச் சுவிசேசகர்கள் (மத்தேயு, லூக்காஸ்) ஒன்று திரட்டி, மலைப்பிரசங்கமாக, தத்தம் நோக்கத்துக்கும், தேவைக்கும், ஆட்களுக்கும் பொருந்தக் கூடிய விதத்தில் கூறியிருக்கிறார்கள்.

தகுந்த காலமும் நேரமும் வந்தபொழுது, கடவுள், தம் திருச்சுதனை அனுப்பி, மக்களுக்குப் போதித்து, கடவுளின் இராட்சியத்தை (இறை அரசை) ஆரம்பித்து வைத்தார். கடவுளின் பிரசைகளை ஒன்று சேர்த்து, கடவுளோடு அவர்களை நெருங்கிய தொடர்பு படுத்திக் கொள்ளுவதற்காக, மோசேசுடைய சட்டம் கொடுக்கப்பட்டது. ஆனால், மோசேஸ் மரணமாகி, பல நூற்றாண்டுகளுக்குப் பின், இந்தச் சட்டங்களைப் பாதுகாத்து, படிப்பித்து வந்த பரிசேயர், சட்ட வல்லுநர், அவற்றை அனுசரிக்க முடியாத வகையில், மக்களுக்குப் படிப்பித்தனர். இதனால் கடவுளின் மக்கள், கடவுளுக்கு எதிராக முணுமுணுத்தனர். இந்தக் கட்டத்தில்தான் இயேசு தோன்றி, புதிய சட்டத்தை — அன்பின் சட்டத்தை அளித்து பழைய சட்டத்துக்குப் பூரணத்துவத்தைக் கொடுத்தார். இயேசு, சட்டத்தை அழிக்க வல்ல, நிறைவேற்றவே வந்தார் என்பது மறைநூலின் மற்றொரு வாக்கு.

இயேசுவின் மலைப் பொழிவானது, கடவுளின் அரசுக்கு அடிக்கல் நாட்டுவதுபோன்று அமைகின்றது. அந்த மூலைக்கல்தான், அந்த மூன்று எழுத்துச் சொல் "**அன்பு**" **கடவுள் அன்பு, பிறர் அன்பு**, (அயலானை அன்பு செய்: எதிரியை அன்பு செய்) இவற்றில் சட்டம், தீர்க்க தரிசனம், வேதாகமம் எல்லாம் அடங்கியிருக்கின்றது. சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட பத்துச் சட்டங்களை அன்பின் சட்டம் அழிக்கவில்லை; ஆனால் பூரணப்படுத்துகின்றது.

**மத்தேயு சுவிசேசத்தில் கூறப்பட்டுள்ள மலைப் பொழிவின் அமைப்பு முறை:-**

ஆரம்பம் : பேறு பெற்றோர் (5, 3–12)
பகுதி I. பூரணமான நீதி.
பொது அறிவுரை: பூரணநீதி (5,17-20)
ஐந்து உதாரணங்கள்: (5,21-24: 27-28: 33-37: 38-42: 43-48)
பகுதி II. நற் செயல்கள்.
பொது அறிவுரை (6, 1)
மூன்று உதாரணங்கள்: (6, 2-4: 5-6: 18-16)

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாணவர் மன்றம்............
[8ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதி III. மூன்று அபாயங்கள்.
(a) தீர்ப்பிடாதே (7, 1-2)
உதாரணம்: விட்டம்-துரும்பு உவமை (3-5)
(b) போலித் தீர்க்கதரிசிகள் (7, 15)
உதாரணம்: மரத்தின் கனி உவமை (16-20)
(c) நீதியை அனுசரிக்கும் முறை (7, 21)
உதாரணம்: இரண்டு மாதிரியான நிலத்தில் கட்டிய வீடு (24-27)

**லூக்காஸ் சுவிசேசத்தில் கூறப்பட்டுள்ள மலைப் பொழிவின் அமைப்பு முறை:-**

ஆரம்பம்: பேறு பெற்றோர்: சாபங்கள். (6, 20b-26)
பகுதி I. பகைவருக்கு அன்பு செய்தல் (24-36)
பகுதி II. தீர்ப்பிடாதீர்கள் (பிறர் சிநேகம்) (37-42)
முடிவு: நற்செயல் புரிவதின் அவசியம் (43-49)

மனத்தரித்திரர், பசியாயிருக்கிறவர்கள், அழுகிறவர்களை, இயேசு ஆசீர்வதித்துப் பேசுகின்றார். ஏனெனில் இப்படியான நிலையிலிருப்பவர்கள், தாழ்மையுள்ளவர்களாகவும், கடவுள்மேல் முழு நம்பிக்கை வைத்துக் கடவுளைத் தேடி நாடிப்போகிறவர்களாகவுமிருக்கிறார்கள் என்பது லூக்காஸ் கொள்கை. அதே நேரத்தில் கடவுளின் இராட்சியத்துக்குள் பிரவேசிப்பதற்கு, இடைஞ்சலாக இருப்பவற்றையும், இயேசு, எடுத்துக் கூறுகின்றார். பணத்தை, மூலகாரணமாகக் குறிப்பிடுகின்றார். உலகிலிருக்கும் சுயநலம், அன்பில்லாத் தன்மைக்கு ஊற்றாகப் பணமிருக்கின்றது என்பதில் ஐயமில்லை. மேலும், தரித்திரம், பசி, தாகம், என்ற வார்த்தைகளுக்குரிய வேதாகம அர்த்தத்தை இங்கு நாம் நினைவு கூர வேண்டும்.

இயேசு. தம் சீசரிடமிருந்து எதிர்பார்க்கிற அன்பு, கிறீஸ்துவ சமயத்தின், பரம இரகசியமாக அமைந்திருக்கின்றது. பிறரன்பைப் பற்றிக் கூறும் இயேசு, எதிரியையும் கூட, அன்பு செய்ய வேண்டுமென்று கூறுகின்றார். ஒருவன் தன் எதிரியை அன்பு செய்வதின் மூலமே, அவன் தன் கடவுளை அன்பு செய்கிறான் என்று நிரூபிக்க முடியும் என்பது இயேசுவின் கொள்கை. ''தீர்ப்பிடாதீர்கள்'' ''மன்னியுங்கள்'' என்று இயேசு திட்டவட்டமாகக் கூறுகின்றார். (6, 37-38) தீர்ப்பிடுவது கடவுளின் அலுவல். இது மனிதனின் அலுவல் அல்ல. அன்பில்லாத் தன்மையிலிருந்தும், சுய திருப்தியிலிருந்தும் உதயமாவது, மற்றவர்களைத் தீர்ப்பிடும் பழக்கம். இதை விளக்குவதற்கு, இயேசு, விட்டத்தையும் துரும்பையும் பற்றிய உவமையைக் கூறுகின்றா.

பகைவரை அன்பு செய்ய முடியாமலும், தீர்ப்புக் கூறுவதையே தம் வழக்கமாகவும் கொண்டிருப்பவர்கள், நற்செயல் எதுவும் செய்ய முடியாது. அன்பு, செய்கையில் காட்டப்படல் வேண்டும். வாய்ப்பேச்சில் மட்டுமிருப்பது உண்மையான அன்பு அல்ல. ஆகவே, ''நான் சொல்லுவதைச் செய்யாமல், 'ஆண்டவரே, ஆண்டவரே' என்று என்னை அழைப்பானேன்?'' என்று இயேசு கூறி, வாய்ப்பேச்சுக்கும், நற்செயலுக்குமுள்ள பாரதூரமான வித்தியாசத்தைக் காண்பிக்க, மணலிலும், பாறையிலும், அடித்தளம் அமைத்து வீடு கட்டின ஒருவனை ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

இப்படியான புரட்சிகரமான ஒரு பொழிவை, எந்த ஒரு மதத் தலைவரும், கிறீஸ்துவுக்கு முன்போ, அல்லது கிறீஸ்துவுக்குப் பின்போ, பொழிந்ததில்லை. இயேசு போதிப்பதோடு மட்டும் நின்றிருந்தால் அதில் பெருமை கொள்ளுவதற்கு ஒன்றுமில்லை. கிறீஸ்து தன் போதனையைச் சாதனையில் செய்து காட்டியிருக்கின்றார். இவற்றைத் தம் வாழ்க்கையில் செய்து நிரூபித்திருக்கின்றார். தன் எதிரிகளுக்காகத் தன் உயிரைக் கொடுப்பதிலும் மேலான அன்பு வேறொன்றுமில்லை. இதுதான் இயேசுவுக்கும் மற்றைய ஆசிரியர்களுக்குமுள்ள பாரதூரமான வித்தியாசம். ★

## எழுத்தாளர் கவனிக்கவும்.

**கிறிஸ்மஸ் விழாவுக்குப் பொருத்தமான** கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதித் தொண்டனுக்கு அனுப்ப விரும்புவோர், அவற்றைத் தயவு செய்து **20-11-70க்குப் பிந்தாமல், தொண்டன் ஆசிரியர்**, c/o **ஆயர் இல்லம், மட்டக்களப்பு.** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். இத் திகதிக்குப்பின் கிடைக்கப்படும் விடயங்கள் பிரசுரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

''ஆசிரியர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர் இல்லம்

## வாழ்க்கையே ஒரு சவால்

சிஸ். எம். றெஜீனல்டா, ஏ. சி.

—✶—

பிறந்தவன் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி இறக்கும் வரை வாழத்தான் வேண்டும். அந்த இறப்பு என்னும் இறுதிக் கட்டம், இறைவனிடம் இருந்து வருகிறதா, அல்லது ஒருவன் தனக்குத்தானே தேடிக்கொள்கிறானா, எதுவாயிருந்தாலும் பிறந்தவன் இறக்கும்வரை வாழத்தான் வேண்டும். இந்த இரு கட்டத்துள் அடங்கியிருக்கும் இந்த வாழ்க்கையே ஒரு சவால் தான். ஆனால்....! திரும்பிப்பார்! நேற்று, அன்று என்ற உன் வாழ்க்கையைத் திரும்பிப் பார்? தெய்வத்திற்கடுத்தவனே என்ன, நீ வாழ்க்கைக்கு சவால் விட்டிருக்கின்றாயா? அல்லது வாழ்க்கை உனக்கு சவால் விட்டிருக்கிறதா? வாழ்பவனே! நாளையின் சமுதாயமே! வாழ்க்கையே ஒரு சவால்! கஷ்ட, துன்பங்களைக் கண்டு கலங்காதே! நாடக மேடையில் ஆட வேண்டிய அத்தனை நாடகங்களும், கட்டம் கட்டமாக ஆடித்தான் ஆகவேண்டும். அன்றேல் அதில் சுவையில்லை! இரசிப்பில்லை. உன் வாழ்க்கை நாடகத்தின் கட்டங்களை வெட்டிக் குறைக்காதே! புறப்படு! முன்சென்று உன் வாழ்க்கையை முற்றுகையிடு! ஆகவேண்டியதெல்லாம் ஆகட்டும்! அஞ்சாநெஞ்சுடன் அதை அனுபவி.

அனுபவம் இல்லையே என்று ஆறி அமர உட்கார்ந்தாயானால், அனுபவம் வருவது எப்படி? அனுபவத்தை அனுபவித்துத்தான் பெறவேண்டும். ஆகவே முன் செல்! முகம் காட்டி ஏற்றுக்கொள். இன்று சவால் விட்டு ஏற்றுக்கொள்! நாளை நீ ஒரு காளை! அனுபவம் ஆசிரியர்களின் ஆசிரியன் — ஆயிரம் பேர் உனக்கு அறிவூட்டலாம், ஆனால் உனது ஒரு அனுபவம் அத்தனைக்கும் மேன்பட்டதாகும். அது உனக்காகக் காத்திருக்கிறது. ஆகவே நீ அதற்காகக் காத்திராது புறப்படு! இரு பகுதியினரும் காத்திருந்தால் சந்திப்பு என்னவாகுமோ!

[12ம் பக்கம் பார்க்கவும்]

## இம்மையில் மறுமை காண்போம்

இ. ஜெகநீசன், மூதூர்.

—✶—

இரக்கமும் தரும சிந்தையும் உள்ள பிரபு ஒருவர் தமது அடிமைகளில் ஒருவனைப் பாக்கியசாலியாக்க விரும்பி அவனைச் சிறையிலிருந்து விடுத்து, விலையுயர்ந்த பலவகைச் சரக்குகள் நிறைந்த ஓர் கப்பலை எத்தனம் பண்ணி அவ்வடிமையைப் பார்த்து ''நண்பனே நீ தேசாந்திரஞ் சென்று இச் சரக்குகளைக் கொண்டு வியாபாரஞ் செய்து ஆதாயம் பெற்று மீண்டும் என்னிடம் வந்து என்னுடைய வேலைத்தளத்தில் ஓர் நல்ல உயர்ந்த பங்கைப் பெற்றுக்கொள்வாயாக'' என்று சொல்லி அனுப்பி விட்டார்.

சிறைமீண்ட அடிமையானவன் கப்பலேறிப் பாய்விரித்தோடவே கப்பல் கடும் புயலிற் சிக்குண்டு, கற்பார் மேல் மோதி சிதைந்தது. அதிற்சென்ற பிரயாணிகளெல்லாரும் உயிரிழந்தனர். ஆனால் அடிமை மட்டும் உயிர் தப்பி ஒரு தீவிற்கரை சேர்ந்தான். அவன் தீவிற் பிரவேசித்து தனக்கேற்பட்ட துன்பங்களை எண்ணி, எண்ணி வருந்திக் கொண்டே சென்றான். அப்போது வெகு தொலைவில் உள்ள நகர மொன்றிலிருந்து பெருந்திரளான மக்கள் அடிமையை எதிர் கொண்டுவந்து ''எங்கள் அரசனே வாழ்க! வாழ்க!'' என்றுகூறி அவனை அரண்மனைக்குக் கொண்டு சென்று அவனுக்கு முடிசூட்டிப் பொற்சிங்காசனத்திலமர்த்தி, அவனைப் பணிந்து. அவனுக்குச் சகல விதத்திலும் அடங்கிப் பணிந்து நடப்பதாக வாக்குறிதி கொடுத்தார்கள்.

அவனோ தனக்குக் கிடைத்த பாக்கியத்தைக் குறித்து அதிசயித்து இதன் இரகசியத்தை அறிய அபேட்சை கொண்டவனாக, அதைப்பற்றித் தன் மந்திரியிடத்தில் வினவினான். அதற்கு மந்திரி ''ஒவ்வொருவருடமும் யாராவது இத் தீவிற்கு வருவார்கள். வருபவனை அரசனாக்கிவிட்டு முந்திய அரசனைக் கப்பலேற்றி, வெகுதொலைவிலிருக்கும் குடியில்லாத் தீவொன்றில் கொண்டுபோய் விடுவார்

[11ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இம்மையில் மறுமை........

[10ம் பக்கத் தொடர்ச்சி]

கள். அத்தீவில் மருந்திற்குக்கூட மனிதர்கள் இல்லை. அவன் அங்கேயே கிடந்து இறுதியில் இறக்க நேரிடும். இது இத்தீவாரின் அனுதி சட்டம். இதை அழிக்க எவராலும் முடியாது. மேற்கூறிய சம்பவங்கள் யாவும் ஒவ்வொரு வருட முடிவிலுமே நடக்கும்'' என்றான்.

அரசனே (அடிமை) தனக்குள் தனக்கு முன் இத்தீவையாண்ட அரசர்களெல்லாம் தங்கள் ஒரு வருட கால ஆளுகை நிலையற்றதென்றதும் தமது வாழ்க்கையை வீண் ஆடம்பரங்களிலும், களியாட்டங்களிலும், உலக ஆசாபாச இன்பங்களிலும் கழித்தார்களே தவிர குடியில்லாத் தீவின் துன்ப துயரங்களை விலக்கத்தக்க எத்தனங்களை ஏற்கெனவே செய்து கொள்ளாமல் வாழ்க்கையை வீணுகக் கழித்தார்களென்று கருதி, தான் அத்துன்ப துயரங்களினின்று தப்பித்துக்கொள்ள அபேட்சை உள்ளவனுகத் தான் இத் துன்ப துயரங்களினின்று விடுபட்டுக்கொள்ள என்ன செய்ய வேண்டுமென மந்திரியை வினவினுன்.

அதற்கு மந்திரி மறுமொழியாக ''நீர் இத்தீவை விட்டுக் குடியில்லாத் தீவிற்குச் சென்றுல் மீண்டும் திரும்பிவர முடியாது. நீர் இப்போது இத்தீவின் அரசனுக இருக்கிறீர். நீர் இப்பொழுது எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்யலாம். அதாவது குடியில்லாத் தீவில் மனிதர்களைக் குடியேற்றி அதை மிகச் செழிப்பும், வனப்பும் செல்வமும் உள்ள தீவாக்கலாம். இப்படிச் செய்வது இத் தேசத்தின் சட்டங்கட்கு விரோதமானதல்ல. நீர் இப்போதே அங்கு தொழிலாளர்களை அனுப்பி வேலையை மேற்கொள்ளச் செய்வீராக. நீர் இப்படிச் செய்தால், உமது காலம் முடிந்து அத்தீவிற்குக் கடத்தப்படும்போது அங்குள்ள மக்கள் உம்மை மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள். எனவே இப்போது இருப்பது சொற்பகாலந்தான். காலதாமதஞ் செய்யாமல் விரைவில் நும் பணியில் ஈடுபடுவீராக. எனது ஆலோசனையை அவமதித்துக் கால தாமதஞ் செய்தால் நிட்சயமாகப் பல பாக்கியங்களை இழப்பதோடு துன்ப துயரத்தில் ஆழ்ந்து போவீர். கஷ்டப்பட்டுத்தான் பலனை அடைய வேண்டும்'' என்றான்.

அரசன் விவேகியானபடியால் மந்திரியின் ஆலோசனையைச் சிரமேற் கொண்டு, வேண்டிய சகல பிரயத்தனங்களையுஞ் செய்தான். வனந்திரமாக இருந்த குடியில்லாத்தீவு சிங்காரப் பூங்காவாக மாறியது. புதிய பல பட்டணங்களும் எழுப்பப்பட்டன. இப்படியே அக் குடியில்லாத் தீவானது செழிப்புற்று வந்ததால் அங்கே சென்ற குடிகள் மனேற்சாகத்துடன் வசிக்க ஏதுவாயிற்று.

இதற்குள் வருட முடிவுஞ் சமீபமாயிற்று. இம்முடிவை நினைக்கும் போதெல்லாம் இதற்கு முன்னிருந்த மன்னர்கள் கலங்குவார்கள். இம் மன்னனே தன் நற்புத்தியினுற் சமைத்து வைத்திருந்த வாசஸ்தலத்தற்குப் போக விருந்ததால் அக்கடை நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அந்நாளும் வந்தது, உடனே அத் தீவிப்பிரசைகள் அரசனை அணுகி அத் தீவின் வழக்கப்படி கிரீடத்தையும் ஆடையாபரணங்களையும் கழற்றிக் கப்பலேற்றிக் குடியில்லாத் தீவிற்கு அனுப்பி விட்டார்கள். அவன் அத் தீவிற் கால்வைத்தவுடனே மக்கள் எல்லாரும் எதிர்கொண்டு அழைத்து மரியாதை செய்து மாலையணிந்து அவனை வரவேற்றனர். கடவுள் அவன் விவேகத்திற்கு நல்ல பலனையளித்தார்.

மேற்கண்ட கதையின் தாற்பரியமென்ன? இரக்கமும் தரும சிந்தையுமுள்ள பிரபு கடவுள். பிரபுவால் விடுதலை செய்யப்பட்ட அடிமை, இவ்வுலககிற் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும்; அவன் இறங்கிய தீவுதான் இவ்வுலகம்; அவனைச் சந்தோஷமாக ஏற்று உபசரித்த குடிகள் தாய் தந்தை மற்றும் மக்கள். அவனுடைய துக்ககரமான முடிவை வெளிப்படுத்தி அதற்கு ஏற்ற பரிகாரம் சொல்லிக் கொடுத்த மந்திரிதான் திருச்சபை. அவனின் ஆட்சி வருடம் மனிதனின் ஆயுள். அவன் அரசாட்சியின் பின் அனுப்பப்படும் குடியில்லாத் தீவுதான் மோட்சம். முந்தி அனுப்பப்பட்ட குடிகள், தொழிலாளர்கள் எல்லாம் அவன் இவ்வுலகிற் செய்யும் நற்கிரிகைகள். தங்களுக்கு வரும் துன்பத்தை விலக்க யாதொரு எத்தனமுஞ் செய்யாத அரசர்கள் இவ்வுலகில் சிற்றின்பங்களில் தங்கள் காலத்தைக் கழிக்கும் மானிடர்.

இச் சிற்றின்பங்களிற் தங்கள் வாழ்நாளைக் கழிக்கும் மானிடர் தமக்குப் புத்தி சொல்லும் குருக்களையும், கன்னியாஸ்திரிமார்களையும் அவதூருகப் பேசுவது, அவசங்கைப் படுத்துவது, அவர்கள் மேல் அபாண்டம் சுமத்துவது போன்ற காரியங்களைச் செய்கிருர்கள். கேவலம் படித்தவர்களே பெரும்பாலும் இக்காரியத்தில் ஈடுபடுகிருர்கள். எப்போது

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வாழ்க்கையே ஒரு சவால்............**

[10ம் பக்கத் தொடர்ச்சி]

உனக்கும், எனக்கும் வாழ்க்கை ஒருமாதிரியாக இருக்கமுடியாது! உன்வாழ்க்கையை நீ அனுபவிக்க வேண்டும் என் வாழ்க்கையை நான். உலகத்தை உற்றுப்பார்! அதில் எத்தனை பேர் இன்று பிறந்த குற்றத்திற்காக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். ஏன் இந்தக் கோலம்? உன்னையறியாமலே, உன் சம்மதமில்லாமலே நீ பிறந்து விட்டாய். அது உண்மைதான், ஆனால், பிறந்துவிட்டாயே! ஆகவே வாழ்க்கையில் எடுக்கக் கூடிய அத்தனையும் எடுத்து அனுபவி! போனால் கிடையாதது உன் வாழ்க்கை! பல 'இன்று' கள் சேர்ந்ததுதான் வாழ்க்கையாகிறது. ஆகவே இன்று வாழ்.

வாழ்க்கையானது உன்னை உருட்டிப் புடைக்கலாம்! ஆட்டி அசைக்கலாம். அத்தனை வலிமை வாழ்க்கைக்கு! ஏன்? நீ ஒருவனல்ல இந்த உலகில் வாழ்ந்துகொண்டிருப்பது! உன்னைப்போல் பலர் வாழ்கிறார்கள். உன் போக்கு, உன் பாதை, உன் வாழ்வு மற்றவனுடைய போக்கிலிருந்து வேறுபட்டிருக்கலாம். ஏனெனில் 'நீ'—ஒரு 'நீ' தான் இந்த உலகில்! நீ இறந்தாலும், உன்னைப் போல ஒருவனை எடுத்தாலும், உன்னை எடுக்க முடியாது. ஏன்? உன்னைப்போல ஒருவனை எடுத்தாலும் உன்னைப் போல ஒருவன் வாழ்ந்தாலும் நீ அவனல்ல—அவனும் நீயல்ல — பின்னே வாழ்க்கையில் மேடுபள்ளம் வருவது நியதியல்லவா? இதுதான் வாழ்க்கை இளைஞனே! இதை நீ முதலே அறிந்தாயானால், இந்த அடிப்படை உண்மையை உணர்ந்தாயானால் வாழ்க்கையில் வரும் எந்தக் கட்டமுமே உன்னை அசைக்கமுடியாது! இன்றைய உன் உயிர்த் தோழன் — அப்படித்தான் நீ எண்ணியிருந்தாய் - நாளை உன் உயிருக்குப் பணயம் வைக்கத்தேடினாலும், உளம் உடைந்து போகாதே! மனம் வருந்தாதே என்று சொல்லவில்லை. இவைகளினால் மனித மனம் சுக்கு நூறுவது இயல்புதான்! பரவாயில்லை! ஆனால் உன் வாழ்க்கையை ஒரு தோல்வியாக மட்டும் எடுத்துக்கொள்ளாதே! அந்த அன்புத் தேவனை, அவரே தெரிந்த அந்த ஆறிருவரில் ஒருவனல்லவா முத்தமிட்டு, முப்பது வெள்ளிக்கு, அதந் மூவுலக தேவனை மதிப்பிட்டான்! ஆகவே உனக்கு மாத்திரம் நடக்காதது ஒன்றும் நடந்து விடவில்லை! இன்னும் அநேக அருளப்பர்களும், பேதுருமார்களும் வாழ்ந்துகொண்டுதானிருக்கிறார்கள். ஒருவேளை உனக்காகத்தானோ? உடைந்த உள்ளத்திலும், உருகிய நெஞ்சிலுமிருந்து தான் பிறக்கிறது தைரியம். வாழ்க்கையை முழுமையாக அனுபவிப்பவர்கள் இப்பேர்ப் பட்டவர்கள்தான். ஆகவே பெருமைகொள் நண்பனே.

வாழ்க்கைப் புயலில் அடியுண்டு, அலைபட்டு, மீண்டும் நெஞ்சு தட்டி நிமிர்ந்து நிற்பவன்தான் மனிதன். உலக அரங்கில் ஒவ்வொன்றையும் எடுத்துப்பார்! சிலர் வாழ்கிறார்கள்! வேறு சிலர் வாழ்ந்துகொண்டே சாகிறார்கள்! இன்னும் சிலர் வேறென்னவோ செய்கிறார்கள். அங்கே தோல்வி இங்கே ஏமாற்றம். வேறுமெங்கோ வேறு என்னவோ? இதுதான் நியதி! என்ன செய்வது? என்ன செய்வதா? உலக வாழ்வில் உனக்கும் உரிமையுண்டு. மன நிம்மதியில் உனக்கும் பங்குண்டு. ஆகவே இளைஞனே, இறைவனில் நம்பிக்கை வை. விடு சவால் வாழ்க்கைக்கு: அப்புறம் வாழ்ந்து பார் உன் வாழ்க்கையை!

✶

---

**இயேசுசபைக் குருமாரின்........**

[2ம் பக்கத் தொடர்ச்சி]

வற சகோதரர்: 27; கன்னியர் மடங்கள்: 10; கன்னியர்: 76; இல்லறத் தூதுவர்: 26; அனாதையர் இல்லங்கள்: 7; வயோதிபர் இல்லம்: 1; பத்திச் சபைகள், பங்குச் சபைகள் முதலியன: 50க்கு மேல்.

இயேசு சபைக் குருமார் சென்ற 75 ஆண்டுகளாக எமது மேற்றிராசனத்தில் ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளுக்காக நாம் முதலில் இறைவனுக்கு நமது உளம் நிறைந்த நன்றியைச் செலுத்துவோம். அடுத்தபடியில் இயேசு சபைக்கு எமது நன்றியையும் பாராட்டுக்களையும் சமர்ப்பிப்போம். இச் சபையை இறைவன் மேன்மேலும் ஆசீர்வதித்து, தற்கால திருச்சபைக்கு சிறந்த தொண்டுகள் செய்யக்கூடியதாக்கும்படி அவரை இறைஞ்சுவோம். எமது மேற்றிராசனத்தின் முன்னேற்றத்திற்கு இயேசு சபைக் குருமாரின் பல தரப்பட்ட பணிகள் இன்னும் தேவைப்படுவதால், அவர்கள் தங்கள் திருத்தொண்டைத் தொடர்ந்து செய்து வருவார்களென்று எதிர்பார்க்கின்றோம். ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நான் பாவி

"ஜெயம்" தாண்டவன்வெளி.

"புத்தாண்டு பிறந்து விட்டது, இதை எத்தனைபேர் கண்டுவிட்டார்கள். இந்த ஆண்டை முழுமையாக எத்தனைபேர் தாண்டப் போகிறார்கள். மேலும் இவ்வாண்டு எத்தனை பேரைத் தாண்டப்போகிறது" இவ்வாறு புது வருடத்தினத்தன்று பங்குக் குருவானவர் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். குறிப்பாக அவர் கூறியது: "காலம் குறுகிக் கிடக்கின்றது, கடமைகளோ பெருகிவருகின்றன" என்பதுதான். இக்கூற்று எனக்கு அடிக்கடி ஞாபகம் வருகின்றது. ஏனெனில் அவர் கூறியதுபோல என் வாழ்வை சிந்தாமல் சிதறாமல் செலவழிக்கவில்லை. இதோ என் மூச்சு முடிந்து மரணமும் நெருக்கிவிட்டது. கைகால்கள் அசைவின்றிக் கண்பார்வை இருமையாகிறது; நேரான பார்வையற்று நெற்றியிலே வியர்வை எழ, உடலில் உஷ்ணமின்றி என் உணர்வும் அணுவணுவாக அடங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த மரண அவஸ்த்தையிலும் என் மனமோ நான் பாவி, பாவி என அலறுகிறது. ஆம்! நான் பாவி, பாவியேதான். பாவ வாழ்வை மேற்கொண்டு போகப் பொருட்களில் பூரணமாய் லயித்து, தேவ ஆசீரை மறந்தபாவி. பொன், பொருள், காணி, பூமி, பட்டம், பதவி அளவற்ற செல்வம் அத்தனையுமிருந்தும், பகுத்தறிவில்லாமற் பண்பற்று நடந்த மகாபாவி.

நான் பாவி என்பதை உணர்கிறேன், மற்றவரும் என்னைப்போல் உழுத்துப்போகாமலிருக்க, உபதேசம் செய்ய வேண்டும் போலிருக்கிறது. ஆனால் இதுவரை எத்தனை பேர் சொல்லிவிட்டார்கள். கேட்டவர்கள் திருத்திவிட்டார்களா. நான் கேட்டேனா பாவி, இல்லையே? இறக்கப்போகும் எண்பதாவது வயதில்த்தான் இந்த ஞானம் தெரிய வருகிறது. ஆனால், இனிமேல் பயன் என்ன? எண்பது வயது பெரிய வாழ்வு வாழ்ந்து விட்டேன். வந்த நாள் முதல் இந்த நாள்வரை என் வாழ்வை எப்படிக் கழித்தேன்? இதை சற்றுப் பின் நோக்கினால் தெரியும். பள்ளமும், படுகுழியும், பாம்பும், தேளும் மலிந்த ஒரு பாவச்சகதி என் வாழ்வு என்பதும், அது ஒரு பாவமாளிகை என்பதும் தெரியும்.

என் பிறப்பை நானறியேன், வளர்ப்பு நானறிய அனாதைப் பள்ளிக்கூடம், எனக்குப் பாதுகாப்பு யோசப்பு வாத்தியார். இந்தப் புண்ணியாத்மா எத்தனை முறை என்னைக் கண்ணியனாக்க முயன்றது. எங்கோ பிறந்து எப்படியோ அலையவேண்டிய என்னை, எடுத்து ஆளாக்கி விட்டவருக்கு என்ன கைமாறு செய்தேன்? பாடசாலையில் சேர்த்துவிட்டார் படித்துப் பட்டம் பெறுவருற்கு; அங்கு படித்துப் பட்டம் பெறவில்லை, எட்டாம் வகுப்புடன் மட்டம் போட்டுவிட்டு, விளையாட்டில் வீரனாகிய நான் மிகவும் துடிப்புடன் நடந்து கொண்டேன். வாத்தியாரும் எனக்குப் புத்திசொல்லி வாயலுத்துவிட்டார், எனது எதிர்கால நன்மையை எண்ணி என்னை இராணுவத்தில் சேர்த்துவிட்டார். அதுவரை மனத்தளவில் இருந்த துடிப்பையெல்லாம் செயலளவில் செய்ய இராணுவம் வழிவகுத்துக் கொடுத்தது.

காளை வயதில், கட்டான உடலில், கவலையற்ற மனதில் கவர்ச்சியான எண்ணங்கள் உதிக்கத் தொடங்கின. இந்த வயதினருக்கு வழமையாக ஏற்படும் காதல் என்னையும் பற்றிக்கொண்டது. காதல் என்றா சொன்னேன்? இல்லை யில்லை காதல் அல்ல. எல்லாருக்கும் காதல் வியாதி ஏற்படுவதுதான், ஆனால், எனக்கு வந்தது காமநோய். ஒரு விதமான மிருக உணர்ச்சி வெறிகொண்டு அலைந்து திரிந்தேன். கவர்ச்சியான கன்னியர் மீது காதல்வலை வீசி அவர்கள் கற்பைக் களங்கப்படுத்தினேன். என் வெறிக்கு இலக்கான பெண்கள் ஏராளம்! என்னைச்சுமந்து பெற்ற தாயின் இனத்தை மிகச் சின்னத்தனமாக நடத்தினேன். ஐயோ; என்ன பரிதாபம். எத்தனை முறை ஆண்டவரருளிய ஆறும் கட்டளைக்கு விரோதமாகப் பாவத்தில்

[14ம் பக்கம் பார்க்கவும்]

நான் பாவி............

[13ம் பக்கத் தொடர்ச்சி]

வீழ்ந்தேன். ஆம் நான் பாவி, பாவி. பாவியேதான் இந்தத்தண்டனையும் எனக்கு ஏற்றதுதான்.

போர்க்காலம் முடிந்து இராணுவத்திலிருந்து வீட்டுக்கு வந்தேன். என் குணுதிசயங்களைக்கண்ட யோசப்பு வாத்தியார் மிகவும் வேதனையடைந்தார். தான் பராமரித்து வளர்த்த பிள்ளை இப்படி பாவியாகிருனே என்று பரிதவித்தார், பல புத்திமதிகள் சொல்லிப்பார்த்தார். என் மிருக மூளையில் அவைகள் அப்பொழுது ஏறவில்லை. திருமணம் செய்து வைத்தால் இப்படியான குணமுள்ளவர்கள் திருந்திவிடுவார்கள் என்று வெகு விரைவாக அதையும் செய்து வைத்தார். திருமணமும் முடிந்து திங்கள் பல சென்றன. ஆனுல் என்நிலையில் திருப்பந்தான் வரவில்லை. மூன்று வருடம் என்னுடன் வாழ்க்கை நடத்திய நன்றிக்கு ஒரு மகனையும் பெற்று என்னிடம் கொடுத்துவிட்டு, முடிவில்லா வாழ்வுக்காக முடிவுள்ள தன் வாழ்க்கையை முடித்துக்கொண்டாள் என் மனைவி. இல்லற வாழ்வை இன்பமாகவும் செழிப்பாகவும் கழிக்க எண்ணி என்னைக் கைப்பிடுத்தாள். ஆனுல் அவள் எதிர்பார்த்த எதுவும் என்னிடமிருக்கவில்லை, என்னைத் திருத்துவதன் மூலம், அந்த நல்வாழ்வைப் பெற முயற்சித்தாள். அது முடியவில்லை. அதற்காக அவள்பட்ட கஷ்டம் எதற்காக என்று கேட்கத் துணையாருமிருக்கவில்லை. அவள் செய்த உபதேசத்தின் அருமை அப்பொழுது தெரியவில்லை இந்த அற்பனுக்கு. அந்த நிர்ப்பாக்கியத்திலிருந்து விடுதலை பெற்று விட்டாள் அவள். மனைவி இறந்து விட்டாள் என்பதற்காகக் கலங்கவுமில்லை, கண்ணீர் விடவுமில்லை, போர்க்களத்தில் அடிக்கடி மரணங்களைக்கண்டு இதயம் மரத்து விட்டது. இந்தக் கொடுமைகளைக் காணப் பொறுக்காமல் வாத்தியாரும் கண்ணை மூடி விட்டார். அவருக்காவது இரண்டு சொட்டு கண்ணீர் விட்டேனு? கல்லாக நின்றேன் நன்றிகெட்ட பாவி. தான் பெருவிடினும் பெற்றவனைவிட பாசமாக போற்றிப் பேணி வளர்த்தவனின் முடிவுகண்டும் பேசாதிருந்தேன். எல்லாம் முடிந்து விட்டது இனி என்ன? பெற்ற மகனைப் பேணி வளர்க்கும் பெரும் பணியுடன் தனியே விடப்பட்டேன். பேணி வளர்க்கப் பொருள் வேண்டும், பொருள் தேடத் தொழில் வேண்டும். இராணுவம் எனக்கு ஆணவத்தை மட்டுமே வளர்த்திருந்தது, இட்ட பணியைச்செய்யும் சட்டத்திற்குக் கட்டுப்பட வாழ்க்கையில் பயிற்றப்பட்டதிஞல் சமூகத்துடன் ஒட்டிவாழப் பழகிக் கொள்ள வேண்டியிருந்தது.

சிரமத்துடன் ஒரு சிறிய கடையை நடத்திவந்தேன். வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டபோதும், என் மனதின் வெறி மாறவில்லை. திரும்பத் திரும்ப அதே பாவத்தைச் செய்தேன். இந்த இன்பத்துக்கு என் மகன் இடையூருக இருக்கக் கூடாது என்பதற்காக, அந்தப் பாலகனை பாடசாலையில் சேர்த்து விட்டேன். ஊரவர்கள் என் ஒழுக்கத்திற் குறை சொன்ன போதும், மனைவியை இழந்தவன்தானே மனதைக் கட்டிப்படுத்த முடியவில்லை என்று சிலர் கூறும் முறையற்ற சமாதானமும் இருக்கத்தான் செய்தது.

இப்படி கதைகள் பெருகப் பெருக என் கடையில் பணமும் பெருகியது. நாளடைவில் நானும் பணக்காரனுகிவிட்டேன். பெயரளவில் என்னை மதித்து வந்தவர்கள், செயலளவில் என்னை வாழ்த்தவும் தொடங்கினர். பிரமுகர் வரிசையில் சேர்க்கப்பட்டு பல பொதுக் கூட்டங்களிலும், விழாக்களிலும் தலைமை வகித்தேன். மேடைகளில் ஒலிபெருக்கியில் ஒழுக்கத்தைப் போதித்தேன். பெண்களின் கற்புநிலையைப் பற்றிப் பேசினேன். பெரிய மனிதப் போர்வையில் மிகச் சின்னத்தனமாக நடந்துகொண்டேன். கோயில்களுக்கு தான தரும மூலம் எனது பெரிய மனிதப் போர்வையைப் பலப்படுத்திக்கொண்டேன் சமய விஷயங்களில் சேவை செய்தேன். என் பலவீனத்தை தெரிந்திருந்தும் பணக்கார என்னை எதிர்த்துக்கேட்க யாரும் துணியவில்லை. எனது இந்த குணத்தை அறிந்த குருவானவர் அன்பாகவும், அழகாகவும் எனக்கு கூறிய அறிவுரைகள்தான் எத்தனை? அவர் அப்படி அடிக்கடி அறிவுரை கூறத் தொடங்கியதும் அவரைச் சந்தித்துப் பேசுவதையும் தவிர்த்துவிட்டேன். அன்று அந்த அறிவுரைகளைக் கேட்டிருந்தால் இன்று இந்தப் பாவம் என்னைத் தொடர்ந்திருக்காது. பாவி நான் கேட்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காந்திஜீயும் கத்தோலிக்க மதமும்

உலகிலேயே சிறந்த பெரியார்களுள் ஒருவராகி, இல்லற வாழ்வின் சிறந்த குடும்பத் தலைவனுக, வலிமைமிக்க வழக்கறிஞராக, திறம்மிக்க அரசியல்வாதியாக, கடவுள் பக்தராக, தாய்நாட்டின் சுதந்திரத் தியாகியாகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட மகாத்மா காந்திஜீயின் நூருவது பிறந்த பெருவிழாவை சென்ற வருடம் அகில உலகமும் அக்களிப்புடன் கொண்டாடி மகிழ்ந்தது.

அந்த மாபெரும் தலைவர் வாழ்ந்து காட்டிய பாதையினை உலகின் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எதிர்நோக்கிப் பார்த்துப் பயனை அடையவேண்டியது அவசியமாகின்றது. குறிப்பாகக் கத்தோலிக்க மக்கள் அந்த மகானை எளிதில் மறக்கமுடியாத வகையில் கிறிஸ்தவ மதத்துடன் மிகவும் நெருக்கமாயிணைந்து வாழ்ந்தவர் அவர்.

கிறிஸ்துநாதருடைய போதனையை வேகமாக உணர்ந்து அதன்படி தம் வாழ்வை மாற்றியமைத்து வழிகாட்டி நிற்கிருர் மகாத்மா அவருடைய வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் கிறிஸ்துவின் போதனையைத் தழுவியே இருக்கின்றது. இயேசுவை அறியவேணுமாகில், அவரைப் பார்க்கவேணுமாகில், அவர் கொள்கைப்படி வாழவேணுமாகில் எதற்கும் அவருடைய நற்செய்தியைத் தாங்கிய சுவிசேஷ நூலைப் படித்தாகவேண்டும். அதற்காகவேதான் இயேசுகிறிஸ்துநாதர் உலகிற்கு சுவிசேஷ நூலை விட்டுப்போயிருக்கின்ருர்.

செல்வி காமல் இக்னேஷியஸ், மட்டுநகர்.

நற்செய்தி ஏட்டினை முழுவதாகப் படித்தவர்க்கு அந்நூலில் இயேசு பல இடங்களில் பல சந்தர்ப்பங்களில் மனித வாழ்வுக்குரிய ஆழமான கருத்துக்களைத் தெளிவாக விளக்கியிருக்கின்றதைக் காணமுடியும். அவற்றுள்ளே மலையில் அவர் ஆற்றிய கருத்துரையை வாசித்தவர்கள் அதை இலகுவில் மறக்கமாட்டார்கள். இயேசுவின் அந்த மலைப் பிரசங்கத்தைப் பற்றி பின் வருமாறு மகாத்மா காந்தி அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கின்ருர்.

''இயேசுவின் மலைச் சொற்பொழிவு அப்படியே என் இதயத்தில் பதிந்துவிட்டது அவற்றுள் உன்னை வலது கன்னத்தில் அறைகிறவனுக்கு உன் மறுகன்னத்தையும் திருப்பிக்காட்டு.'' ''உன்னோடு வழக்காடி உன் உள்ளாடையை எடுத்துக்கொள்ள விரும்புகிறவனுக்கு உன் மேல் ஆடையையும் விட்டுவிடு.'' இந்த வாக்கியங்கள் திரு உரைகள் தன்னை மிகவும் கவர்ந்ததாகத் தனது வரலாற்று நூலான ''சத்திய சோதனை'' இல் குறிப்பிட்டு இருக்கின்ருர்.

அவர் சிறைவாசம் அனுபவிக்கும்பொழுது நடைபெற்ற சம்பவம் ஒன்றை இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். காந்தி அவர்கள் தம் வாழ்நாளில் அதிகநேரத்தை இறைவணக்கத்தில் செலவிடுவது வழமை. ஒரு தடவை அவர் சிறையிலிருந்தபொழுது ஒரு நாள் நெடுநேரம் தியானத்தில் ஈடுபட்டிருந்தார். அவருக்கு உணவு கொடுக்கும் வேளை வந்தது. அதற்காக நீண்டநேரம் காத்துநின்ற காவல்காரன் தன் பொறுமையை இழந்துவிட்டான். அவன் ஒரு முன்கோபியும் கூட. அவரைப் பலதடவை அழைத்தும் அதைக் காதில் விழுத்தாதமையினுல் தியானத்திலிருந்த காந்தியைக் காலால் உதைத்துவிட்டான். அந்த உதை அவர் முகத்திற்பட்டு அதனுல் அவர் வாயிலிருந்து இரத்தம் வடிந்தது. காந்தி அவர்களோ சிறிதும் கோபமடையாது தன் கையால் இரத்தத்தைத் துடைத்துவிட்டு, அமைதியாக அவ்வீரனின் காலைத் தமது கையால் தடவிவிட்டு, உங்கள் காலை எனது பல் குத்தியிருக்குமே, பிறருக்குத் துன்பம் செய்யும் இந்தப் பல்லைக் கடவுள் எனக்குத் தந்ததற்காக நான் மிகவும் வருந்துகிறேன் என்று அமைதியாகக் கூறியதைக் கேட்ட அக் காவல் காரனுக்கு வெட்கமுண்டாகிவிட்டது. தனது கொடிய செயலுக்காக வருந்தியதுடன் அந்த மகாத்மாவை வணங்கிப் பல முறை மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

இன்னும் மகாத்மா காந்தி தனது ஐம்பத்தோராவது வயதில் ஆயிரத்தித்தொளாயிரத்து இருபதாம் ஆண்டு ஒருமுறை அமெரிக்காவிற்கு விஜயம் செய்த பொழுது அவரைப் பேட்டிகாண வந்திருந்தவர்களுள் திரு.

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இம்மையில் மறுமை............**

[11ம் பக்கத் தொடர்ச்சி]

மற்றவர்களிற் பிழை பிடிக்கலாம் என எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தங்களில் உள்ள பிழைகளை அவர்கள் உணர்வதில்லை.

இளமை நிலையாது, இவ்வுலக வாழ்வு அநித்தியம். மறுமை நித்தியம். இவ்வுலக வாழ்வைக் கொண்டு நித்திய பேரின்ப வாழ்வைத் தேடுபவர்களே விவேகிகள். இவ்வுலகில் பொக்கிசத்தைத் தேடவேண்டாம். அது அழிந்து விடும். மறு உலகத்திலேயே பொக்கிசத்தைத் தேடுங்கள், அதி அழியாது. ❋

---

**இறைவழிபாட்டுச்...........**

[3ம் பக்கத் தொடர்ச்சி]

திருவருட்சாதனங்கள் யாவும் கிறிஸ்து பெருமானால் ஏற்படுத்தப்பட்டவை. இவைகளைத் தவிர, தூய அன்னையாம் திருச்சபை அருட்கருவிகளையும் ஏற்படுத்தியுள்ளது. திருவருட்சாதனங்களை ஒருவாறு ஒத்திருக்கும் குறிகளாகிய இவை, முக்கியமாக ஞான விளைவுகளைக் குறித்துக்காட்டி திருச்சபையின் மன்றாட்டினால் அவற்றைப் பெற்றுத் தருகின்றன. திருவருட்சாதனங்களின் சிறந்த பயனைப் பெற இவை மக்களை ஆயத்தப்படுத்துகின்றன. அவர்களது வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளையும் புனிதப்படுத்துகின்றன.

இவ்வாறு, விசுவாசிகளின் வாழ்விலுள்ள ஏறக்குறைய எல்லா நிகழ்ச்சிகளும் கிறிஸ்துவின் பாடு, சாவு உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறை நிகழ்ச்சியிலிருந்து வழியும் இறையருளால் புனிதமடைகின்றன. ஏனெனில், கிறிஸ்துவிடமிருந்தே திருவருட்சானங்கள் அருட்கருவிகள் அனைத்தும் தம் ஆற்றலைப் பெறுகின்றன. நேர்மையாகக் கையாளப்படும் உலகப் பொருட்களில் எதுவும், இறைவனைப் புகழவும் மனிதனைப் புனிதப் படுத்தவும் பயன்படாமல் இருக்கமுடியாது. (இறைபணி 60, 61)

ஆகவே, திருவருட்சானங்கள், அருட்கருவிகள் குறிப்பவற்றை விசுவாசிகள் நன்ருகப் புரிந்து கொள்ளவேண்டும். கிறிஸ்தவ வாழ்வை வளர்ப்பதற்கு, திருவருட்சாதனங்களையும் ஆருட்கருவிகளையும் ஆவலுடனும் பத்தியுடனும் அடிக்கடி பெறவேண்டும். ★

**காந்திஜியும் கத்தோலிக்க......**

[15ம் பக்கத் தொடர்ச்சி]

கிளமென்ஸ் எனப்பட்ட பத்திரிகை நிருபர் ஒருவரும் இருந்தார். பேட்டி நடந்துகொண்டிருந்த வேளையில் உலகிலேயே உங்களைக் கவர்ந்த புத்தகம் எது என்ற வினவை எழுப்பினார் திரு. கிளமென்ஸ். சில வினாடிகளின் பின் மகாத்மா கூறினார்: **''என்னை உலகிலேயே மிகவும் கவர்ந்த புத்தகம் கிறீஸ்தவர்களின் வேத நூலான பைபிள் புத்தகமேதான்.''** அவர் தொடர்ந்து கூறினார், ''எந்த வழியைப் பின்பற்றுவது என்று பல தடவைகள் நான் திகைத்ததுண்டு. பைபிளைப் படித்த பின் நான் செல்லவேண்டிய வழி எனக்குத் தெரிந்தது. குறிப்பாகப் புதிய ஏற்பாடு எனக்குப் புதிய சக்தியை அளித்தது'' என்றார்.

இன்னும் மகாத்மா காந்தி அவர்கள் இந்தியாவில் கத்தோலிக்க கல்லூரி ஒன்றின் பரிசளிப்பு விழாவுக்குக் கருத்துரை வழங்குமாறு பணிக்கப்பட்டிருந்தார். காந்தி அவர்கள் அந்த விழாவிலே கருத்துரை வழங்குகையில் குறிப்பிட்ட ஒரு கட்டம் நாம் மிக வேகமாக சிந்திக்க வேண்டியதொன்றாகும் **''இயேசுவையும் அவர் யாத்த சுவிசேஷ நூலையும் - கிறீஸ்தவ மதத்தையும்கூட நான் மிகவும் நேசிக்கின்றேன், விரும்புகின்றேன். ஆனால் ஒன்று: கிறீஸ்தவர்கள் எனக்குப் பிடிப்பதில்லை. காரணம் கிறீஸ்துவின் கொள்கை வேறு அவர்களுடைய வாழ்க்கை வேருயிருக்கின்றது. பெயரளவில்தான் அவர்கள் கிறீஸ்தவர்கள்''** என்றார். கத்தோலிக்க மக்கள் எந்தக் கொள்கைகளை அவசியம் பின்பற்ற வேண்டுமோ அவற்றையெல்லாம் அவர்கள் காற்றில் பறக்கவிட்டு விட்டார்கள் என்பதாகும். மறுசமயத்தவராயினும் காந்திஜீ கிறீஸ்து போதனைப்படி பகைவர்களிடத்து அன்பு காட்டினார். தீண்டாமையைத் திவிரமாக எதிர்த்தார். உயர்வு தாழ்வு நிலையைப் போக்கி சமத்துவ வாழ்விற்கு அடி கோலினார்.

எனவே, கத்தோலிக்க மதம் இயேசுவின் போதனையைச் செயல் முறையிலே வாழ்ந்து காட்டிய வள்ளலை, மகாத்மா காந்தி அவர்களை இலகுவில் மறந்துவிட முடியாதென்பதை இப்பொழுதாயினும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் மக்கள் மகாத்மா காட்டிய அந்த அறநெறிப் பாதையிலே எதிர்காலத்தில் எடுத்தடி வைக்கத் தயங்கக்கூடாது. ★

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு அவர்களால் 4–11–70ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media